தினமணி

**விவசாயிகள் பயிற்சி முகாம்**

First Published : 15 Feb 2010 01:23:46 AM IST

பொள்ளாச்சி, பிப்.14: பொள்ளாச்சி தெற்கு வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்பில் நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் பயிற்சி முகாம் கடந்த வியாழக்கிழமை கஞ்சம்பட்டியில் நடந்தது.

வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண் பொறியியல் துறை, பொதுப் பணித் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

பொள்ளாச்சி தெற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மு.வே. மோகனசுந்தரம் முகாமைத் துவக்கி வைத்து நீர் வள, நில வளத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களான நிலக்கடலை மற்றும் பயிறு வகை செயல் விளக்கத் திடல்கள் அமைப்பது குறித்தும், அதன் தொழில் நுட்பங்கள் குறித்தும் விளக்கினார்.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து உதவி இயக்குநர் நாகராஜ் விளக்கினார்.

வேளாண் பொறியியல் துறை சார்பில் உதவிப் பொறியாளர் நாகேஷ் விளக்கமளித்தார்.

பொதுப் பணித் துறை உதவிப் பொறியாளர் சம்பத், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் சாந்தி ஆகியோர் பேசினர்.

வானிலை சார்ந்த காப்பீட்டுத் திட்டம் குறித்து இப்கோ நிறுவனத்தின் கண்ணன் விளக்கினார். கோலார்பட்டி ஊராட்சித் தலைவர் கே.பி.ராமசாமி உள்ளிட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். துணை வேளாண்மை அலுவலர் வி.பி.அசோகன் நன்றி கூறினார்.

**புவிவெப்பமடைவதைத் தடுக்க விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் திருப்பூரில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு**

First Published : 15 Feb 2010 02:19:36 AM IST

திருப்பூர், பிப்.14: புவி வெப்பமடைந்து வருவதைத் தடுக்க, திருப்பூரில் நடந்த மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்று ஓடினர். இப்போட்டிகளில் முதல் 3 இடங்களை பிடித்தவர்கள் சென்னையில் நடக்கும் மாநில அளவிலான மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

÷மாவட்ட விளையாட்டு அலுவலகம் மற்றும் முயற்சி மக்கள் அமைப்பு இணைந்து, புவி வெப்பமடைதலைத் தடுக்க மாவட்ட அளவிலான மாரத்தான் ஓட்டத்தை திருப்பூரில் ஞாயிற்றுக்கிழமை நடத்தின. இதில், 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள், மாணவியர், 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் என 4 பிரிவுகளில் 6 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்றனர்.

÷திருப்பூர், காங்கயம் சாலை செயின்ட் ஜோசப் மெட்ரிக். பள்ளியில் துவங்கிய இந்த மாரத்தான் ஓட்டம் மாணவர்களுக்கு பிரிவுக்கு 6 கி.மீ தூரமும், மாணவியர் பிரிவுக்கு 5 கி.மீ, ஆண்கள் பிரிவுக்கு 15 கி.மீ, பெண்கள் பி6ரிவுக்கு 7 கி.மீ தூரமும் நடந்தன. மாரத்தான் ஓட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் சி.சமயமூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட எஸ்பி ஏ.அருண் முன்னிலை வகித்தார். போட்டிகளை திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் ஏ.சக்திவேல் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

÷இப்போட்டிகளில் ஆண்கள் பிரிவில் கே.தட்சிணாமூர்த்தி முதல் பரிசை வென்றார். இ வருக்கு ரூ.5 ஆயிரம் ரொக்கமும் 2 கிராம் தங்க நாணயமும் பரிசளிக்கப்பட்டது. இதே பிரிவில் 2வது பரிசை என்.தீனதயாளன், 3வது பரிசை சி.சிவானந்தம் ஆகியோர் வெ ன்றனர்.

÷பெண்கள் பிரிவில் கே.மகேஸ்வரி முதல் பரிசை வென்றார். அவருக்கு ரூ.4 ஆயிரம் ரொக்கமும் 2 கிராம் தங்க நாணயமும் பரிசளிக்கப்பட்டது. 2வது பரிசை பி.தனலட்சுமி, 3வது பரிசை எஸ்.வித்யா ஆகியோர் பெற்றனர்.

÷மாணவர்கள் பிரிவில் முதல் பரிசை ஆர்.மோகன்ராஜ் வென்றார். அவருக்கு ரூ.3 ஆ யிரம் ரொக்கமும், 2 கிராம் தங்க நாணயமும் பரிசளிக்கப்பட்டது. 2வது பரிசை எம்.சந்திரகுமார், 3வது பரிசை ஐ.இலியாஸ் அஹமத் ஆகியோரும் வென்றனர். மாணவியர் பிரிவில் முதல் பரிசை ஆர்.ஜான்சிராணி வென்றார். அவருக்கு ரூ.2 ஆயிரம் ரொக்கத்துடன் 2 கிராம் தங்கநாணயம் பரிசளிக்கப்பட்டது. 2வது பரிசை எம்.மைதிலிப்ரிதா, 3வது பரிசை எம்.மோகனப்பிரியா ஆகியோர் வென்றனர்.

÷தவிர ஒவ்வொரு பிரிவுகளிலும் 4 முதல் 10 இடங்களை பிடித்தவர்களுக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன. மாவட்ட அளவில் நடந்த இந்த மாரத்தான் ஓட்டத்தில் முதல் 3 இடங்களை பிடித்த வீரர்கள், சென்னையில் பிப்.21ல் நடக்கும் மாநில அளவி லான மாரத்தான் போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

÷பரிசுகளை நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கி சிறப்புரையா ற்றினார். விழாவில் மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.வெங்கட்ராமன், நல்லூர் நகராட்சித் தலைவர் ஜி.விஜயலட்சுமி, முயற்சி மக்கள் அமைப்பின் தலைவர் என்.சிதம்பரம், தொழிலதிபர்கள் என்.சந்திரன், கே.ஆர்.நாகராஜன் பங்கேற்றனர்.÷

**நிலக்கடலை விவசாயிகளுக்கு  மானிய விலையில் ஜிப்சம்**

First Published : 15 Feb 2010 12:47:45 AM IST

சங்ககிரி, பிப்.14: நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள் ஜிப்சம் இடுவதை ஊக்குவிப்பதற்காகவும், சாகுபடிச் செலவைக் குறைப்பதற்காகவும், தமிழக அரசு வேளாண் துறை மூலம் 50 சதவீத மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படுகிறது.

இது குறித்து வேளாண் உதவி இயக்குநர் ப.செளந்தரராஜன் தெரிவித்துள்ளதாவது:

நிலக்கடலை சாகுபடியில் ஜிப்சம் இடுவது மிகவும் இன்றியமையாத தொழில்நுட்பம். கடைசி உழவில் அடியுரமாகவும், விதைத்த 45ம் நாளில் 2வது களையெடுத்து மண் அணைக்கும் போதும் ஜிப்சம் இடுவது அவசியம்.

இதனால் மண் பொலபொலப்புத் தன்மை உள்ளதாக இருப்பதுடன் அதிக விழுதுகள் இறங்கி, திரட்சியான அதிக காய்கள் முழுமையான பருப்புகளுடன் உற்பத்தியாகும்.

÷நிலக்கடலைக்கு ஜிப்சம் இடுவதால் ஏக்கருக்கு குறைந்தபட்சம் 200 கிலோ கூடுதல் மகசூல் நிச்சயம் கிடைக்கும். தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் வேளாண்மைத்துறை மூலம் விவசாயிகளுக்கு ஜிப்சம் வழங்கப்படுகிறது.

÷சங்ககிரி மற்றும் தேவூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் போதுமான அளவு ஜிப்சம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி, உரிய விண்ணப்பம் வழங்கி, தேவையான அளவு மானிய விலையில் ஜிப்சத்தை பெற்றுக்கொள்ளலாம்.

÷ஒரு ஹெக்டருக்கு 400 கிலோ ஜிப்சம் மானிய விலையில் வழங்கப்படும் என, வேளாண் உதவி இயக்குநர் கூறியுள்ளார்.

**விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம்**

First Published : 15 Feb 2010 01:20:15 AM IST

திருவண்ணாமலை, பிப்.14: வேளாண்மைத் துறை சார்பில் துரிஞ்சாபுரம் வட்டாரத்தில் விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம் அண்மையில் நடந்தது.

கருந்துவாம்பாடி கிராமத்தில் நடந்த பயிற்சி முகாமுக்கு வேளாண் துணை இயக்குநர் அ.வீரமணி தலைமை தாங்கிப் பேசியது: விதை கிராமத் திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு என தரமான விதை உற்பத்தி செய்யவும், குறைந்த செலவில் அதிக

விளைச்சல் பெற்று உணவு உற்பத்தியை அதிக்கப்படுத்தவும் தொழில்நுட்ப பயிற்சி தரப்படுகிறது.

விவசாயிகள் உயிர் உரங்கள், நுண்ணுரங்கள், கோனாவீடர் போன்ற கருவியை பயன்படுத்தி உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்றார் அவர்.

இடுபொருள் கண்காட்சியை தொடங்கி வைத்து உதவி இயக்குநர் ஜ.அக்கண்டராவ் பேசியது: விதை உற்பத்தி தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்தி தரமான விதையை உற்பத்தி செய்ய வேண்டும். மேலும் ஒவ்வொரு பருவத்துக்கும் விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையங்களிலோ, தனியார் விதைக்கடைகளிலோ அதிக விலை கொடுத்து வாங்காமல், தாங்களே தரமான விதையை உற்பத்தி செய்து சாகுபடி செய்யலாம் என்றார்.

துணை வேளாண் அலுவலர் எஸ்.அன்பழன் பேசுகையில், செம்மை நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் நெற்பயிரில் குறைந்த நீர், பணச்செலவை குறைத்து அதிக விளைச்சல் லாபம் பெறலாம் என்றார்.

ஊராட்சித் தலைவர் வி.தினகரன் முன்னிலை வகித்தார். மருத்துவாம்பாடி, சாணானந்தல், எரும்பூண்டி, ஆர்ப்பாக்கம், வள்ளிவாகை, முத்தரசம்பூண்டி, வேடந்தவாடி, சடையனோடை, கொளக்கரவாடி, வெளுங்கநனந்தல், மேப்பத்தூரை கிராமங்களிலும் இப்பயிற்சி முகாம் நடைபெற்றது.

**மரக்கன்று நடும் விழா**

First Published : 15 Feb 2010 04:05:11 AM IST

கமுதி,பிப்.14: கமுதி அருகேயுள்ள காவடிபட்டி இந்து நடுநிலைப் பள்ளியில் மரக் கன்றுகள் நடும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மதுரை பீல் சுற்றுச்சூழல் அமைப்பு சார்பில் நடைபெற்ற விழாவுக்கு பள்ளித் தலைமையாசிரியர் எம்.சீனிவாசன் தலைமை வகித்தார். மதுரை சுற்றுச்சூழல் ஆர்வலர் வழக்கறிஞர் எஸ்.சன்ராஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசினார். விழாவையொட்டி, பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. கமுதி வட்டார சுற்றுச்சூழல் அமைப்புத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி நன்றி கூறினார்.

**திருவாடானை பகுதியில் நெல் விலை கடும் வீழ்ச்சி: கவலையில் விவசாயிகள்**

First Published : 15 Feb 2010 04:03:01 AM IST

திருவாடானை பிப்,14: திருவாடனை பகுதியில் இந்த ஆண்டு சம்பா பருவ சாகுபடி நெல் விலை கடும் வீழ்ச்சி அடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகாவில் இந்த ஆண்டு பருவ மழை தாமதமாக பெய்தாலும் விவசாயப் பணிகள் தொய்வில்லாமல் நடைபெற்றுவந்தன.

ஆனால் அறுவடை செய்யும் நேரத்தில் புகையான் மற்றும் நெல் பழம் நோய் தாக்கி ல் பல ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டன.

இந்நிலையில், தற்போது அறுவடை செய்யபட்ட கர்நாடக டீலக்ஸ் பொன்னி ரக 60 கிலோ மூடை நெல் ரூ.680-க்கு வியாபாரிகள் வாங்கின்றனர்.

இதேநெல் கடந்த ஆண்டு அறுவடை நேரத்தில் ரூ. 850-க்கு விற்பனை செய்யப்பட்டது.

அதேபோல, சேசிஎல் நெல் ரகம் ரூ. 600-க்கு விற்பனை செய்யபடுகிறது. இதே நெல் கடந்த ஆண்டு ரூ.820-க்கு விற்பனை செய்யபட்டது.

இதனால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

இதுசம்பந்தமாக பில்லுகுடி விவசாயி ராமனாதன் கூறுகையில், இந்த ஆண்டு சம்பா பருவ சாகுபடியில் மழை, பூச்சி போன்ற பல இன்னல்களுக்கிடையே விவசாயம் செய்து அறுவடை நேரத்தில் நெல் விலை கடும் விழ்ச்சி அடைந்துள்ளது விவசாயிகளுக்கிடயே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் இந்த நெல் மூடைகளை அதிக விலை நிர்ணயம் செய்து வாங்க அரசு உத்தரவிட வேண்டும் என்று விவசாயிகளின் சார்பில் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதாக கூறினார்.

**பனி, பூச்சித் தாக்குதல்: கத்தரிக்காய் உற்பத்தி குறைவு**

First Published : 15 Feb 2010 12:01:04 AM IST

கோபி, பிப்.14: கடுமையான பனி மற்றும் பூச்சித் தாக்குதலால் கத்தரிக்காய் உற்பத்தி பெருமளவில் குறைந்துள்ளது, சென்ற வாரத்தை விட கத்தரிக்காய் விலை கிலோவுக்கு 10 ரூபாய் அதிகரித்துள்ளது.

இந்தியாவை தாயகமாக கொண்ட கத்தரிக்காய், வெப்பம் அதிகம் உள்ள பகுதிகளில் ஆண்டுதோறும் பயிரிடப்படுகிறது. வெப்பம் மிகுந்த, வடிகால் வசதி கொண்ட வண்டல் அல்லது களி கலந்த இருமண்பாட்டு நிலத்தில் கத்தரிக்காய் பயிரிடலாம். நிலத்தின் அமில, காரத்தன்மை 5.5-6.0 வரை இருந்தால் கத்தரிக்காய் மகசூல் அதிகமாக இருக்கும். திருமணம் உள்ளிட்ட எந்த விசேஷமாக இருந்தாலும் கத்தரிக்காய்தான் உணவில் முதலிடத்தை பெறுகிறது.

தமிழகத்தில் கோ-1, கோ-2, எம்.டி.யூ.,-1, அண்ணாமலை-1, பி.கே.எம்.-1, பாலூர்-1, கே.கே.எம்.-1 ஆகிய கத்தரிக்காய் ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. இதில் கோ-2 ஒரு ஏக்கருக்கு 30 முதல் 35 டன் வரையிலும் கே.கே.எம்.-1 ரகம் 36 டன் வரையிலும் மகசூலை தருகிறது.

திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் வெளிர்பச்சை, வெள்ளை, வெளிர் ஊதா ரகங்களும், ராமநாதபுரம், சிவகங்கையில் வெள்ளை நிற உருண்டை மற்றும் நீள உருண்டை ரகமும், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியில் வெள்ளை உருண்டை ரகமும், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, தஞ்சாவூரில் ஊதா உருண்டை மற்றும் ஊதா நீள உருண்டையும், வேலூர் மற்றும் திருவண்ணாமலையில் மேல்பகுதியில் முட்கள் கொண்ட ஊதா வரி ரக கத்தரிக்காய் பயிரிடப்படுகிறது.

ஈரோடு மற்றும் கோவை மாவட்டத்தில் முள்ளற்ற ஊதா வரி கொண்ட கத்தரிக்காய் அதிகளவில் பயிரிடப்படுகிறது. இதை கண்ணாடி கத்தரிக்காய் என்றும் அழைப்பர்.

மே-ஜூன் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலும், டிசம்பர்-ஜனவரி முதல் மே மாதம் வரையிலும் கத்தரிக்காய் விளைச்சலுக்கு நல்ல சீஸன். ஒரு ஹெக்டருக்கு 380 முதல் 400 கிராம் வரை கத்தரிக்காய் விதை பயன்படுத்தி செடி நடலாம்., விதைத்த 40 அல்லது 45 நாளில் நாற்று நடலாம். நடவு செய்த 50-வது நாளிலிருந்து அறுவடை செய்யலாம். கோபி மற்றும் சுற்றுப் பகுதியில் கடந்த டிசம்பர் மாதம் நூற்றுக்கணக்கான ஏக்கரில் கத்தரிக்காய் நடவு ஆரம்பித்தது. வழக்கமாக காய் விடும் பருவத்தில் அதிகளவில் பனி வீசுகிறது. பொதுவாக காய் விடும் பருவத்தில் பனி அல்லது மழை பெய்தால் கத்தரிக்காய் மகசூல் பாதிக்கும், கோபி பகுதியில் தற்போது உள்ள அதிகப் பனி மற்றும் மூக்கு வண்டு, செம்பேன் போன்ற பூச்சி தாக்குதலால் கத்தரிக்காய் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.

திருமணம் உள்ளிட்ட சுப விசேஷ காலமாக இருப்பதால் கத்தரிக்காய்க்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது, ஆனால் வரத்து குறைவால் கத்தரிக்காய் விலையும் அதிகரித்துள்ளது, கடந்த மாதம் ஒரு கிலோ கத்தரிக்காய் 15 ரூபாய் முதல் 17 ரூபாய் வரை விற்றது. தற்போது வரத்து குறைவால் ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.27 வரை விற்பனையாகிறது.

வரும் மாதங்களில் திருமணம் உள்ளிட்ட சுப விசேஷங்கள் அதிகளவில் இருப்பதால் கத்தரிக்காய் விலை மேலும் உயரும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வெளிச்சந்தையில் பருப்பு விலை குறைந்தும் ரேஷன் கடையில் விலை குறையவில்லை**

First Published : 15 Feb 2010 12:54:01 AM IST

மஞ்சூர், பிப்.14: விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும் நோக்கில் தனியார் விற்பனையாளர்கள் பருப்பின் விலையை குறைத்திருக்கும் நிலையில், பொதுவிநியோகத் திட்ட நியாய விலைக் கடைகளில் பருப்பின் விலை குறைக்கப்படாதது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த இரண்டுகளாக அத்தியாவசியப் பொருள்களின் விலை கிடுகிடு என உயர்ந்து வருகிறது. குறிப்பாக துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சர்க்கரை உள்ளிட்ட பொருள்களின் விலை கடுமையாக அதிகரித்தது. இந்த விலை உயர்வால் நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்கள் மிகவும் பாதிப்படைந்தனர்.

எனவே தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நியாயவிலைக் கடைகளில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரூ.50க்கு மளிகை பொருள்கள் ஆகியவை மானிய விலையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டன.

கடந்த ஒராண்டுக்கு முன்பு இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட போது துவரம் பருப் பின் விலை வெளிச்சந்தையில் ரூ.60 முதல் ரூ.70வரை இருந்தது. ஆனால், நியாயவிலைக் கடைகளில் ரூ.35க்கு சலுகை விலையில் வழங்கப்பட்டது. இந்த சலுகை விலை திட்டம் மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருந்தாலும், மிளகாய்த் தூள், மல்லித் தூள், கடுகு உள்ளிட்ட ரூ.50க்கு மளிகைப்பொருள் திட்டம் தரமின்மையால் வரவேற்பை இழந்தது.

ஆனால், துவரம் பருப்பின் விலை தொடர்ந்து ஏறுமுகமாகவே இருந்ததால் மானிய விலை பருப்புக்கு தொடர்ந்து ஆதரவு இருந்தது. சில மாதங்களுக்கு முன்பு துவரம் பருப்பு வெளிச்சந்தையில் கிலோ ரூ.100முதல் 110வரை விற்கப்பட்டது. அப்போது பொதுவிநியோகத் திட்டத்திலும், பருப்பு ரூ.35லிருந்து ரூ.40ஆக உயர்த்தப்பட்டது.

தற்போது துவரம் பருப்பு வெலிச்சந்தையில் ரூ.65 முதல் ரூ.75வரை விற்பனை செய்யப்படுகிறது. இரண்டாம் ரக துவரம் பருப்பு ரூ.65க்கும் குறைவாகவே விற்பனை செய்யப்படுகிறது.

தனியார் சந்தையில் துவரம் பருப்பு ரூ.100 வரை விற்பனை செய்தபோது, ரூ.5 உயர்த்தி ரூ40க்கு பொதுவிநியோகத் திட்டத்தில் விற்பனை செய்த தமிழக அரசு, தற்போது வெளிச்சந்தையில் துவரம் பருப்பு விலை சுமார் ரூ.40வரை குறைந்துள்ள நிலையிலும், பழைய விலையில் விற்பனை செய்து வருவது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், பொது விநியோகத் திட்டத்தில் திட்டத்தில் வழங்கப்படும் துவரம் பருப்பு தரம் குறைந்த, இளந்துவரை வகையைச் சேர்ந்தது. இந்த இளந்துவரை ரகம் தற்போது வெளிச்சந்தையில் ரூ.45க்கு கிடைப்பதால், நியாயவிலைக் கடையில் வழங்கப்படும் பருப்பின் விலை குறைக்கப்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**பத்தாண்டுகளாக காய்க்காத ஆரஞ்சு மரங்கள்**

First Published : 14 Feb 2010 03:13:57 AM IST
Last Updated : 14 Feb 2010 12:08:08 PM IST

குன்னூர் பிப்.13: குன்னூர் அருகிலுள்ள கிளிஞ்சடா மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் உள்ள ஆரஞ்சு மரங்கள் காய்க்கும் தன்மை இழந்துள்ளதால் இங்குள்ள விவசாயிகள் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

÷கிளிஞ்சடா மற்றும் அதனைச் சுற்றி வாழும் விவசாயிகள் ஆரஞ்சு சாகுபடியில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தலைமுறை தலைமுறையாக ஈடுபட்டு வந்தனர். இங்கு சாகுபடி செய்யப்படும் ஆரஞ்சுப் பழங்கள், கோவை,சேலம், நாமக்கல், ஈரோடு,பொள்ளாச்சி போன்ற தமிழகத்தின் பலப்பகுதிகளுக்கும், கர்நாடகம், ஆந்திரம் போன்ற வெளிமாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வந்தன.

÷பல ஏக்கர் கணக்கில் சாகுபடி செய்யப்பட்டு வந்த இந்த ஆரஞ்சு விவசாயத்தை நம்பி நூற்றுக்கு மேற்பட்ட குடும்பஙகள் வாழ்ந்து வந்தன. இந்நிலையில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு இங்குள்ள ஆரஞ்சு மரங்களில் ஒருவித நோய் தாக்கி இவை காய்க்கும் தன்மையை இழந்தன.

÷படிப்படியாக இந்த நோயின் தாக்குதல் அதிகரித்து, இங்குள்ள அனைத்து மரங்களும், 10 ஆண்டுகளாக முற்றிலும் காய்க்கும் தன்மையை இழந்தன. இந்த மரங்களில் ஏற்பட்டுள்ள நோய் குறித்து ஆய்வு செய்ய முன்பு வந்திருந்த வேளாண்மை அதிகாரிகள் கண்துடைப்பிற்காக சில காரணங்களைக் கூறிச் சென்றார்களாம்.

÷அதன்பின் எந்தத் தகவலும் இல்லை என்கின்றனர் இங்குள்ள விவசாயிகள். இந்த மரங்களில் உள்ள நோயைத் தீர்ப்பதற்கு இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று புலம்புகின்றனர், கிளிஞ்சடா பகுதியைச் சேர்ந்த விவசாயிகள்.

÷கடந்த 10 ஆண்டுகளாக ஆரஞ்சு விவசாயம் மூலம் கிடைத்து வந்த வருவாயை இழந்து தத்தளித்து வரும் இந்த விவசாயிகளின் துயர் துடைக்க வேளாண்மை அதிகாரிகளும், வேளாண்மை விஞ்ஞானிகளும் முன் வர வேண்டும்.

**விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம்**

First Published : 15 Feb 2010 01:20:15 AM IST

திருவண்ணாமலை, பிப்.14: வேளாண்மைத் துறை சார்பில் துரிஞ்சாபுரம் வட்டாரத்தில் விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம் அண்மையில் நடந்தது.

கருந்துவாம்பாடி கிராமத்தில் நடந்த பயிற்சி முகாமுக்கு வேளாண் துணை இயக்குநர் அ.வீரமணி தலைமை தாங்கிப் பேசியது: விதை கிராமத் திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு என தரமான விதை உற்பத்தி செய்யவும், குறைந்த செலவில் அதிக

விளைச்சல் பெற்று உணவு உற்பத்தியை அதிக்கப்படுத்தவும் தொழில்நுட்ப பயிற்சி தரப்படுகிறது.

விவசாயிகள் உயிர் உரங்கள், நுண்ணுரங்கள், கோனாவீடர் போன்ற கருவியை பயன்படுத்தி உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்றார் அவர்.

இடுபொருள் கண்காட்சியை தொடங்கி வைத்து உதவி இயக்குநர் ஜ.அக்கண்டராவ் பேசியது: விதை உற்பத்தி தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்தி தரமான விதையை உற்பத்தி செய்ய வேண்டும். மேலும் ஒவ்வொரு பருவத்துக்கும் விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையங்களிலோ, தனியார் விதைக்கடைகளிலோ அதிக விலை கொடுத்து வாங்காமல், தாங்களே தரமான விதையை உற்பத்தி செய்து சாகுபடி செய்யலாம் என்றார்.

துணை வேளாண் அலுவலர் எஸ்.அன்பழன் பேசுகையில், செம்மை நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் நெற்பயிரில் குறைந்த நீர், பணச்செலவை குறைத்து அதிக விளைச்சல் லாபம் பெறலாம் என்றார்.

ஊராட்சித் தலைவர் வி.தினகரன் முன்னிலை வகித்தார். மருத்துவாம்பாடி, சாணானந்தல், எரும்பூண்டி, ஆர்ப்பாக்கம், வள்ளிவாகை, முத்தரசம்பூண்டி, வேடந்தவாடி, சடையனோடை, கொளக்கரவாடி, வெளுங்கநனந்தல், மேப்பத்தூரை கிராமங்களிலும் இப்பயிற்சி முகாம் நடைபெற்றது.

### பி.டி. கத்தரிக்காய் நிரந்தரத் தடை கோரி கையெழுத்து இயக்கம்

First Published : 15 Feb 2010 12:00:00 AM IST

மதுராந்தகம், பிப். 14:    பி.டி. கத்தரிக்காயுக்கு நிரந்தரமாக தடை விதிக்கக் கோரி, தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் காஞ்சிபுரம் மாவட்ட கிளையின் சார்பில் கையெழுத்து இயக்கம் இங்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

÷இதையொட்டி, மதுராந்தகம் பஸ் நிலையம் அருகே தொடங்கிய பிரசார நிகழ்ச்சிக்கு அதன் மாநிலச் செயலர் வெங்கடேசன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் முனுசாமி, மாவட்ட துணைத் தலைவர் வரதராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில துணைத் தலைவர் என்.மாதவன் கையெழுத்து இயக்கத்தில் முதல் கையெழுத்திட்டார். மாவட்டச் செயற்குழு உறுப்பினர் சங்கரதாஸ் வரவேற்றார்.

### வேளாண் இணை இயக்குநர் ஆய்வு

First Published : 15 Feb 2010 06:00:46 AM IST

வேதாரண்யம், பிப்.14: நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் திட்டப் பணிகளை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கருணாகரன் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார்.

நெய்விளக்கு கிராமத்தில் ஒட்டுநெல் செயல் விளக்கத்தையும், அண்டர்காடு கிராமத்தில் சாகுபடி வயலையும், தோப்புத்துறை தோட்டத்தில் மண்புழு தயாரிப்பு செயல் விளக்கத்தையும் அவர் ஆய்வு செய்தார்.

உதவி இயக்குநர் பி. மணிகண்டன், உதவி வேளாண் அலுவலர்கள் எம். சுப்பிரமணியன், எஸ். வேதரத்தினம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**பரமக்குடியில் விவசாயிகள் சங்கக் கூட்டம்**

First Published : 15 Feb 2010 03:58:42 AM IST

பரமக்குடி,பிப்.14: பரமக்குடி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக் குழுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்துக்கு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் வி.எஸ்.மணி தலைமை வகித்தார். செயலாளர் கே.சுப்பிரமணியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் என்.கே.ராஜன் ஆகியோர் முன்னிலை வகி6த்தனர்.

கூட்டத்தில் மார்ச் 17-ம் தேதி விவசாயிகள் சங்க இடைநிலை குழுக் கூட்டம் நடத்துவது;

அதைத் தொடர்ந்து பரமக்குடியில் மார்ச் 27-ம் தேதி மாவட்ட மாநாடு நடத்துவது மற்றும் கிருஷ்ணகிரியில் நடைபெறும் மாநில மாநாட்டில் திரளாகக் கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

மேலும், அரசுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதுபோல் 58 வயது நிறை வடைந்த அனைத்து விவசாயிகளுக்கும் நிபந்தனையின்றி ஓய்வூதியம் வழங்கவேண்டும்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் போதிய மழையில்லாததாலும், நெற்பயிர்களைக் கடுமையான நோய் தாக்கியதாலும் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

**மரபணு மாற்ற காய்கறிகளால் குழந்தைப் பேறின்மை ஏற்படும்**

First Published : 15 Feb 2010 12:55:13 AM IST
Last Updated : 15 Feb 2010 05:57:40 AM IST



சென்னை, பிப். 14: மரபணு மாற்ற பயிர்கள், உணவுகள் காரணமாக குழந்தைப் பேறின்மை ஏற்படும் என்று பாலியல் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

சென்னை ஆகாஷ் குழந்தையின்மை சிகிச்சை மையம் சார்பில் 5-வது சர்வதேச பாலியல் மருத்துவ மாநாடு சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு தினங்கள் நடைபெற்றன.

இதில் ஆகாஷ் குழந்தையின்மை சிகிச்சை மையத்தின் தலைவர் டாக்டர் டி.காமராஜ், இயக்குநர் டாக்டர் ஜெயராணி காமராஜ் உள்பட சர்வதேச பாலியல் மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் நிறைவு தினத்தன்று குழந்தைப் பேறின்மையை ஏற்படுத்தக்கூடிய மரபணு மாற்றப் பயிர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும்

அனுமதிக்கக் கூடாது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் மரபணு மாற்ற காய்கறிகள், பழங்கள் குறித்த நீண்ட கால ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

மாணவர்கள் கெடாமல் இருக்க...: பருவ வயதில் மாணவ-மாணவியர் தவறான வழியில் சென்று வாழ்க்கையை கெடுத்துக் கொள்வதைத் தடுக்கும் வகையில் 5-ம் வகுப்பு முதல் அடிப்படை பாலியல் கல்வியைக் கற்பிக்க வேண்டும்.

அதாவது, 5-ம் வகுப்பில் உடல் அமைப்பு குறித்த அடிப்படைக் கல்வி, 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை உடல் ரீதியான சில முக்கிய விஷயங்கள்-பராமரிப்பு விஷயங்களைக் கற்றுத் தர வேண்டும்.

இதையடுத்து பிளஸ் 1, பிளஸ் 2 பாடத்தில் பாலியல், எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வுக் கல்வியை பாடமாக வைக்க வேண்டும் என்று மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் குழந்தைப் பேறு அளிப்பதற்கான நவீன சிகிச்சைகள் குறித்தும் மருத்துவ நிபுணர்கள் விவாதித்தனர்.

### வேளாண் திட்டப் பணிகள்: கூடுதல் இயக்குநர் ஆய்வு

First Published : 14 Feb 2010 03:17:31 AM IST
Last Updated : 14 Feb 2010 12:07:46 PM IST

திருச்செங்கோடு, பிப்.13: திருச்செங்கோடு வட்டம் பள்ளிப்பாளையத்தில் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களை சென்னை கூடுதல் வேளாண் இயக்குநர் மதுமதி வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

ஆவத்திபாளையம் உழவர் பணி கூட்டுறவு சங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள அக்ரி கிளினிக் மற்றும் மண் ஆய்வுக்கூடங்களை அவர் பார்வையிட்டார். மண் மாதிரி, பாசனநீர் மாதிரி மற்றும் மண்வள அட்டைகள் அளிப்பதை நேரில் கேட்டறிந்தார். மண் மாதிரி ஆய்வுகளை காலதாமதமின்றி செய்து விவசாயிகளுக்கு முடிவுகளை வழங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து அலமேடு சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டு செம்மை நெல் சாகுபடி பற்றி விவசாயிகளிடம் கலந்துரையாடினார்.

கோனோவீடர் கருவி பயன்பாடு, காய்ச்சலும், பாய்ச்சலும் பாசன முறை ஆகியவற்றை சிறப்பாகச் செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார். பள்ளிப்பாளையம் வேளாண் விரிவாக்க மையம், தானியங்கி வானிலை ஆய்வு மைய செயல்பாடு ஆகியவற்றை அவர் பார்வையிட்டார். வேளாண் துணை இயக்குநர் பிரபாகரன், உதவி இயக்குநர் முரளீதரன், வேளாண் அலுவலர்கள் ஜெகதீசன், கவிதா, ஞானப்பிரகாசம் ஆகியோர் உடனிருந்தனர்.

தினமலர்

### விவசாயிகளுக்கு தீவன பயிர் உரம்

பொள்ளாச்சி:கப்பாளாங்கரை கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்கம் சார்பில் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் பி.ஏ.பி., விவசாயிகளுக்கு தீவன பயிர் உரம் வழங்கப்பட்டது.கொண்டேகவுண்டன்பாளையத்தை சேர்ந்த 20 பி.ஏ.பி., நீர்பாசன விவசாயிகளுக்கு கால்நடை தீவன பயிர் விதைகள் வழங்கப்பட்டது. கப்பாளங்கரை கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் முத்துமாணிக்கம், நெகமம் கால்நடை நிலைய மருத்துவர் பிரகாஷ் ஆகியோர் விதைகளை வழங்கினார். விவசாயிகளுக்கு 20 கிலோ வீதம் விதை வழங்கப்பட்டுள்ளது.

### வாழைத்தார் வரத்து குறைந்ததால் விலையும் கிடு..கிடு..என உயர்ந்தது

பொள்ளாச்சி:பொள்ளாச்சி சந்தையில் வாழைத்தார் வரத்து குறைந்துள்ளதால், விலை உயர்ந்துள்ளது.பொள்ளாச்சி சந்தையில், இரண்டு மாதங்களாக வாழைத்தாரில் தூத்துக்குடி சீசன் நடந்து வருகிறது. திருச்செந்தூர், தூத்துக்குடி, கணியூர், வேட்டைக்காரன்புதூர், ஆனைமலை உட்பட சுற்றுப்பகுதிகளிலிருந்தும் வாழைத்தார் வரத்துள்ளது.தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில், பனிபொழிவு அதிகரித்துள்ளதாலும், மரங்களுக்கு ஏற்ற நீர் கிடைக்காததாலும், வாழை விளைச்சல் குறைந்துள்ளது. இதனால், வழக்கமாக 10 ஆயிரம் வரத்தாக இருக்கும் சந்தையில் ஆயிரம் வாழை தார் மட்டும் வரத்தாகவுள்ளது.போதிய வரத்து இல்லாததால், கேரளாவுக்கு வாழைத்தார் அனுப்புவது குறைந்துள்ளது. தற்போது 700 வாழைத்தார் மட்டுமே கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது.

இதனால், அனைத்து ரக வாழைத்தாரின் விலையும் உயர்ந்துள்ளது.கடந்த மாதம் 160 ரூபாய்க்கு விற்ற பூவன் ரக வாழைத்தார் இம்மாதம் 250 ரூபாய்க்கும், 200 ரூபாய்க்கு விற்ற மோரிஸ் ரக வாழை 300 ரூபாய்க்கும்விற்கிறது. ரஸ்தாளி - 250, கற்பூரவல்லி - 300, செவ்வாழை - 400, நேந்திரம் (கிலோ) - 20, "ராணி' பூவன்(கிலோ) - 18 ரூபாய்க்கும் விற்பனையானது.காந்தி மார்க்கெட் வாழைப்பழ வியாபாரிகள் கூறியதாவது:வாழைத்தாரில் தூத்துக்குடி சீசன் நடந்தாலும், விளைச்சல் இல்லை. இதுவே, விலையேற்றத்திற்கு காரணம். இன்னும், இரண்டொரு வாரங்களுக்கு வாழைத்தார் வரத்து குறைந்தே இருக்கும். விலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.ஒரு மாதத்தில், அனைத்து ரக வாழைத்தாரின் விலையும் நூறு ரூபாய் வரை உயர்ந்துள்ளது. பொள்ளாச்சி சந்தையில் விற்பதை காட்டிலும் கேரளாவுக்கு அனுப்பும் வாழைத்தார்களின் விலையில் 50 ரூபாய் கூடுதல் விலை நிர்ணயித்து அனுப்பப்படுகிறது.பங்குனி மாதத்தின் துவக்கதிலிருந்தே சந்தைக்கு வாழைத்தார் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது.இவ்வாறு, வியாபாரிகள் தெரிவித்தனர்.

### பாமாயில் மரம் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்: நெல் உற்பத்தி கணிசமாக குறைய வாய்ப்பு

காட்டுமன்னார்கோவில்:நெல்பயிரை மட்டுமே நம்பியிருந்த காவிரி டெல்டா கடைமடை பகுதி விவசாயிகள் சமீப காலமாக பாமாயில் பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோவில் பகுதிகள் காவிரி டெல்டா கடை மடை பகுதிகளாக கருதப்படும். இங் குள்ள விவசாயிகள் நெல் சாகுபடியை மட்டுமே நம்பி விவசாயம் செய்து வருகின்றனர். குறிப்பாக அப்பகுதியின் உயிர் நாடியாக விளங்கும் வீராணம் ஏரியின் பாசனத்தை நம்பி 70 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த 5 ஆண்டுகளாக மழை, வெள்ளம், பருவம் தவறிய மழை, கடும் வறட்சி உள்ளிட்ட பிரச்னைகளை சமாளித்து தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபட முடியாமல் திணறி வருகின்றனர்.இதனால் பல்லாயிரக்கணக்கில் கடன் பெற்று விவசாயம் செய்தும் பலன் இல்லாமல் நஷ்டம் அடைந்து வருகின்றனர். இதனால் விவசாயிகள் மாற்று பயிராக பாமாயில் மரம் பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த 3 ஆண்டுகளாக பாமாயில் பயிர்

செய்யப்பட்டு வந்தாலும் தற்போது விவசாயிகளின் ஆர்வம் அதிகரித்துள்ளது.காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் கடந்த 2006ம் ஆண்டு மேலகடம்பூரில் அப்துல் வதூது 3 ஏக்கரில் பாமாயில் பயிர் செய்தார். அவரையடுத்து கணேசன் என்பவர் 5 ஏக்கரில் பாமாயில் பயிர் செய் தார். ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து பாமாயில் பயிர் செய்வது அதிகரித்து வருகிறது.உற்பத்தி செலவு, திருடு பயம், கூலி ஆட்கள், குறைந்த தண்ணீர் தேவை, சுலபமான அறுவடை போன்ற காரணங்களால் பாமாயில் பயிர் செய்வது விவசாயிகள் மத்தியில் தொடர்ந்து வரவேற்பை பெற்றதையடுத்து தற் போது 800 ஏக்கர் வரை காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் பாமாயில் பயிர் செய்யப்பட்டுள்ளது.பாமாயில் பயிர் செய்யும் நிலத்தில் ஊடுபயிராக நெல், வாழை, உளுந்து பயிரிட்டு லாபமடையலாம். அதுமட்டுமில்லாமல் விவசாயிகள் இடம் மட்டும் கொடுத் தால் போதும். உரம், கன்றுகள் என அனைத்து உதவிகளையும் அரசு மானியமாக கொடுத்து, பராமரிப்பு செலவையும் அரசே கவனித்துக்கொள் கிறது. தொடர்ந்து பயிர் வளரும் வரை 4 ஆண்டுகள் தொடர்ந்து மானியமாக அரசு வழங்கி வருகிறது.இதனால் கடன் வாங்கி விவசாயம் செய்து மழை, வெள்ளத்தில் நஷ்டப்படுவதை விட "ரிஸ்க்' இல்லாமல் விவசாயம் செய்வதே சிறந்தது என விவசாயிகள் பாமாயில் மரத்தை பயிர் செய்வதில் அதிக அளவு ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இப்பகுதியில் நெல் உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பாமாயில் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வேளையில் இந்த பாமாயில் சாகுபடி வரும் காலத்தில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.

### மரக்கன்றுநடும் விழா

கடலூர்:கடலூர் கருணை கரங்கள் கல்வி மற்றும் பொது நல தொண்டு நிறுவனம் சார்பில் மரக் கன்றுகள் நடும் விழா நடந்து.தேவனாம்பட்டினம் பெரியார் அரசு கலைக் கல்லூரி அருகே நடந்த விழாவிற்கு கருணை கரங்கள் செயலாளர் கங் காதரன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் கிருஷ்ணன் வரவேற் றார். நகரமன்ற துணைத் தலைவர் தாமரைச் செல்வன் மரக்கன்றுகளை நட்டார். அன்னை தெரசா சேவை இயக்க அமைப்பாளர் அகஸ்டின் பிரபாகரன், கருணை கரங்கள் தலைவர் கண்ணன், பொருளாளர் மகேந்திரவர்மன், துணை செயலாளர் சிவாஜி, மணிவண்ணன், முருகன், விஜய் கலந்து கொண்டனர்.

### அண்ணாமலை கத்தரி செடிகள்: வேளாண் மாணவர்கள் ஆய்வு

கிள்ளை:சி.முட்லூர் பகுதியில் விளைந்துள்ள அண்ணாமலை கத்தரிக்காயை வேளாண் மாணவர்கள் ஆய்வு செய்தனர்.சிதம்பரம் அடுத்த சி.முட்லூர் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள அண் ணாமலை கத்தரி தோட் டங்களை அண்ணாமலை பல்கலைக் கழக வேளாண் கல்லூரி நான் காம் ஆண்டு மாணவர்கள் வேளாண் விரிவுரையாளர் ராஜ்பிரவீன் தலைமையில் ஆய்வு செய்தனர். பின்னர் அப்பகுதி விவசாயிகளிடம் தோட்டப்பயிர்களால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக் கமளித்தனர்.

### சம்பா பயிர் ஈட்டுறுதி திட்ட பரிசோதனை

கிள்ளை:சிதம்பரம் அடுத்த நக்கரவந்தன்குடியில் சம்பா பருவ பயிர் ஈட்டுறுதி திட்ட பரிசோதனை நடந்தது.பரங்கிப்பேட்டை வட்டார வேளாண் துறை சார்பில் சம்பா பருவ பயிர் ஈட்டுறுதி திட்டத்தின் மூலம் களை பரிசோதனை முன் னோடி விவசாயி குலசேகர் வயலில் மேற்கொள் ளப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டது. தற்போது கதிர் முற்றிய நிலையில் நடந்த அறுவடை நிகழ்ச்சியில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் மணி தலைமை தாங்கினார். வேளாண் துணை துணை இயக்குனர் பாபு, உதவி இயக்குனர் தனசேகர், வேளாண் அலுவலர் விஜயா, விவசாய சங்க தலைவர் ரவீந்திரன் உள்ளிட் டோர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு விதை கிராம பயிற்சி முகாம்

நத்தம்: நத்தம் விவசாய விரிவாக்க மையம் சார்பாக விதை கிராம முதல் கட்ட பயிற்சி முகாம் நடத்தப் பட்டது.நத்தம் விவசாய விரிவாக்க மையத்தின் சார்பாக செந்துறை, கோமனாம் பட்டி மூங்கில்பட்டி, குடகிபட்டி, புன்னப்பட்டியில் நடந்த முகாமில் நெல் விதை தரமாக உற்பத்தி செய்வது குறித்தும்,பயறு வகை விதை பற்றியும் பயிற்சியளிக்கப் பட்டது. முகாம்களில் எண் ணெய் வித்து நேர்த்தி செய் வது, தரமான எண்ணெய் விதைகள் உற்பத்தி செய்யும் முறை,அதிலுள்ள பிரச்னைகளை தீர்க்கும் முறை குறித்து பயிற்சியளிக்கப்பட்டன. முகாமில் விவசாய உதவி இயக்குனர் ராஜகோபால், துணை விவசாய அலுவலர் துரைராஜ், பயிற்சி அலுவலர் தேன் மொழி, விவசாய அலுவலர்கள் ஆனந்த்,சுரேஷ் மற்றும் விவசாய துறையைச் சேர்ந்த பணியாளர் கள் பங்கேற்றனர்.

## நெல் அறுவடையான வயல்களில் பயறு வகைகளை விதைக்க ஆர்வம்

திண்டுக்கல்: பயறு,பருப்பு வகைகளின் விலைகள் அதிகரித்து வரும் நிலையில்,நெல் அறுவடையான வயல்களில் இவற்றை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.பயறு, பருப்பு வகைகளுக்கு தேவை அதிகரித் துள்ளதால் விலையிலும் ஏற்றம்,இறக்கம் காணப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் 30 ஆயிரம் ஹெக்டேருக்கும் மேற் பட்ட நிலங்களில் நெல் அறுவடை நடந்து வருகிறது. அறுவடை முடிந்த நிலங்களில் பயறு, பருப்பு வகைகளை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர் வம் காட்டுகின்றனர்.தரமான விதைப்பயிர்கள்,உயிர் உரங்கள் விவசாயிகளுக்கு கிடைப் பதில் சிரமம் ஏற்பட்டுள் ளது.இந்த சிரமங்களை தவிர் க்கும் வகையில் விவசாயிகளுக்கு மானிய விலையில் பயறு,பருப்பு வகை விதைகளையும், உயிர் உரங்களையும் வழங்க விவசாயத் துறை முன்வர வேண்டும்.

## சொட்டு நீர்ப்பாசனத்துக்கு மானியம் உயர்வு

ஈரோடு: சொட்டுநீர்ப் பாசனம் செய்யும் விவசாயிகளுக்கு தமிழக அரசு வழங்கும் மானியம் 65 சதவீதமாக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் நிலவி வரும் வறட்சியால் சில ஆண்டுகளாக சொட்டு நீர்ப்பாசன முறைக்கு மாறும் விவசாயிகள் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே செல்கிறது. கரும்பு, தென்னை, பழப்பயிர், காய்கறி, வாசனைத் திரவியம், நறுமணப் பயிர், மருத்துவப் பயிர் மற்றும் தோட்டக்கலை பயிர் செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் சொட்டு நீர்ப்பாசனத்துக்காக அதிகபட்சமாக 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.ஊடுபயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, இடைவெளிக்கேற்ப ஊடுபயிர் அல்லது முக்கிய பயிர் ஆகிய இரண்டில் ஏதாவது ஒன்றுக்கு மட்டும் விவசாயியின் விருப்பத்துக்கு ஏற்ப அதிகபட்சமாக 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. 50 சதவீத மானியத்தில் மத்திய அரசு 40 சதவீதம், மாநில அரசு 10 சதவீதம் வழங்கி வருகிறது. சென்ற 2009 ஜூன் 20ல் இருந்து மாநில அரசு வழங்கும் நிதியை கூடுதலாக 15 சதவீதம் உயர்த்தியுள்ளது. அவ்வாறு வழங்கப்படும்போது மத்தியரசு நிதியாக 40 சதவீதமும், மாநில அரசு நிதியாக 25 சதவீதம் உயர்ந்து மொத்தம் 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. சொட்டு நீர் பாசனத்துக்கு ஒரு விவசாயிக்கு குடும்பத்துக்கு அதிகபட்சமாக ஐந்து ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படுகிறது. தமிழகத்திலேயே ஈரோடு மாவட்டத்தில்தான் அதிகளவில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. பயிரின் இடைவெளிக்கு ஏற்ப அனுமதிக்கப்பட்ட மானியம் மாறுபடுகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கு 200 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்காக அரசால் அங்கீகரிக்கப்பட்ட 22 சொட்டு நீர்ப்பாசன நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் மூலம் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கப்படுகிறது. 2007 முதல் இதுவரை மாவட்டத்தில் 2,430 விவசாயிகள் 3,700 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டுநீர்ப் பாசனம் மூலம் சாகுபடி மேற்கொண்டுள்ளனர். அவற்றுக்கு மானியத் தொகையாக மொத்தம் ஒன்பது கோடியே 14 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. சப்போட்டா, மஞ்சள், காய்கறிகள், தென்னை, பூக்கள், கொய்யா, மக்காச்சோளம் ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சொட்டு நீர்ப்பாசனம் வழங்குவது பயிரின் இடைவெளிக்கு தகுந்தாற்போல் மானியம் வழங்கப்படுவதால் அதன் விபரம்: 1/1 மீட்டர் இடைவெளிக்கு ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 980 ரூபாய், 1.5/1.5 மீட்டர் இடைவெளிக்கு ஒரு லட்சத்து 82 ஆயிரத்து 650 ரூபாய், 2/2 மீட்டர் இடைவெளிக்கு ஒரு லட்சத்து 45

ஆயிரத்து 210 ரூபாய், 2.5/2.5 மீட்டர் இடைவெளிக்கு ஒரு லட்சத்து 55 ஆயிரத்து 740 ரூபாய், 3/1.5 மீட்டர் இடைவெளிக்கு ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 585 ரூபாயும், 3/3 மீட்டர் இடைவெளிக்கு ஒரு லட்சத்து 2,895 ரூபாய், 4/4 மீட்டர் இடைவெளிக்கு ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 545 ரூபாய், 5/5 மீட்டர் இடைவெளிக்கு 98 ஆயிரத்து 20 ரூபாய், 6/6 மீட்டர் இடைவெளிக்கு 89 ஆயிரத்து 310 ரூபாய், 8/8 மீட்டர் இடைவெளிக்கு 56 ஆயிரத்து 30 ரூபாய், 9/9 மீட்டர் இடைவெளிக்கு 52 ஆயிரத்து 715 ரூபாய், 10/10 மீட்டர் இடைவெளிக்கு 49 ஆயிரத்து 985 ரூபாய், 12/12 மீட்டர் இடைவெளிக்கு 46 ஆயிரத்து 345 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. மானியம் பெற விரும்புவோர் தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை அல்லது வேளாண் பொறியியல் துறையை அணுகலாம்.

**விவசாயிகள் சங்க கிளை கூட்டம்**

கிருஷ்ணகிரி: தமிழ்நாடு விவசாயிகள் சங்க கிளை துவக்க கூட்டம் பர்கூரை அடுத்த காளிகோவிலில் நடந்தது.பெருமாள் தலைமை வகிதத்தார். வட்ட தலைவர் சிவாஜி முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் கண்ணு பேசினார். காளிக்கோவில் கிளை தலைவராக முனியப்பன், செயலாளராக எல்லப்பன், பொருளாளராக ரமேஷ் மற்றும் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். காளிக்கோவில் பகுதியில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் விவசாயம் பாதிப்புக்குள்ளாகி வருவதால், அந்த பகுதியில் சீரான மின் விநியோம் செய்ய வேண்டும், விவசாய நிலங்களில் புகுந்து நாசம் செய்யும் காட்டு விலங்குகளை கட்டுப்படுத்த வேண்டும், கிராமத்துக்கு தார் சாலை அமைக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

**விவசாயிகள் பயிற்சி முகாம்**

மேலூர் : மாவட்ட அளவிலான ஆத்மா திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு இரண்டு நாள் பயிற்சி முகாம் மேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடந்தது. முகாமிற்கு ஊராட்சி ஒன்றிய தலைவர் அழகுபாண்டி தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குனர்கள் சேவுகப் பெருமாள், சம்பத்குமார், வேளாண் பொறியியல் துறை செயற் பொறியாளர் ஆரோக்கியசாமி, தோட்டக் கலைத் துறை உதவி இயக்குனர் பூபதி, மதுரை வேளாண் விற்பனை குழு செயலாளர் பாஸ்கர்ராஜ், உதவி இயக்குனர் கணேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். பல்வேறு பகுதிகளில் இருந்து 25 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு வேளாண்மை மற்றும் அதனை சார்ந்த துறைகள், நவீன தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. முகாமிற்கான ஏற்பாடுகளை வேளாண்மை துணை அலுவலர் அசோகன், உதவி வேளாண் அலுவலர்கள் பெரியசாமி, கந்தசாமி, கீதா, தவப்பிரியா, சந்தானலட்சுமி செய்திருந்தனர். அலுவலர் கமலா லட்சுமி நன்றி கூறினார்.

**அங்கக வேளாண்மையை கடைப்பிடிக்க விவசாயிகளுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்**

நாகை:நிலத்தின் வளத்தை கூட்டி அதிக மகசூல் பெற விவசாயிகள் அனைவரும் அங்கக வேளாண்மையை கடைப்பிடிக்க வேண்டும் என்று நாகை கலெக்டர் முனியநாதன் பேசினார்.நாகை அருகே சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வேளாண் துறை, வேளாண் அறிவியல் நிலையம் ஆகியவை சார்பில் அங்கக வேளாண் கருத்தரங்கு நடந்தது. கருத்தரங்கை தொடக்கி வைத்து கலெக்டர் முனியநாதன் பேசியதாவது:

காவிரி டெல்டா கடைமடை பகுதியான நாகை மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்வதால் ஏற்படும் வெள்ள நீர் மண்ணில் உள்ள சத்துக்களை அடித்துச் செல்கிறது. தொடர்ந்து உபயோகிக்கும் ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் நிலத்தின் தன்மையை கெடுத்து மகசூலை குறைத்து கொண்டே வருவதுடன், சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது. இதனால் விளை நிலத்தில் உள்ள நுண்ணுயிர்கள் எண்ணிக்கை குறைந்து நிலம் செயலிழக்கும் நிலையை அடைந்துள்ளது. இந்நிலையில் நிலத்தின் வளத்தை கூட்டி அதிக மகசூல் பெற அனைவரும் அங்கக வேளாண்மையை கடைப்பிடிக்க வேண்டும். வேம்பு, புங்கன், சஸ்பேனியா பசுந்தழைகளை

உழவின்போது இட்டும், சணப்பு, கொளிஞ்சி, நரிப்பயிறு போன்ற பசுந்தாழ் பயிர்களை அறுவடைக்குப் பிறகு பயிரிட்டும் நிலத்தின் வளத்தை பெருக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்வதால் இழந்த மண்ணின் வளம், வடிவம், கட்டமைப்பு மேம்படுத்தப்படுவதுடன் பயிரில் பூச்சி நோய் தாக்குதல் குறைந்து சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டு அதிக விளைச்சல் கிடைக்கும் என்றார். வேளாண் விற்பனைக்குழு தலைவர் அம்பலவாணன் பேசுகையில், மண்ணிற்கேற்ற மண் புழுக்கள், மரங்களை வளர்த்து இயற்கை வேளாண் தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும் என்றார். வேளாண் உதவி இயக்குனர் சந்திரகாசன் வரவேற்றார். அலுவலர் தனவேந்தன் நன்றி கூறினார்.

### தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்திகள் குடியிருக்க வாய்ப்பு

குன்னூர் : நீலகிரியில் உறைபனியின் தாக்கம் குறைந்து, வெயில் சுட்டெரிக்க துவங்கியுள்ளது; "தேயிலை செடிகளை சிவப்பு நில சிலந்திகள் தாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது' என "உபாசி' எச்சரித்துள்ளது.நீலகிரியில் ஆண்டுதோறும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பனிப்பொழிவு அதிகரித்திருக்கும்; பகல் நேரங்களில் குளிர், மாலை, இரவில் உறைபனி காணப்படும். ஜனவரி 2ம் வாரம் துவங்கி, ஏப்ரல், மே வரை கோடை சீசன் களைகட்டும். கடந்தாண்டு நவம்பர் மாதம் நீலகிரியில் கொட்டித் தீர்த்த வரலாறு காணாத மழையால், காலநிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.வழக்கத்துக்கு மாறாக, ஜனவரி துவங்கி கடந்த வாரம் வரை பனியின் தாக்கம் இருந்தது; பகல் நேரத்தில் கூட பனி மூட்டத்துடன் கூடிய கடுங்குளிர் நிலவியது. குன்னூர், குந்தா, ஊட்டி உட்பட இடங்களில் 200 எக்டேர் பரப்பில் தேயிலை தோட்டங்கள் கருகின. சில நாட்களாக உறைபனியின் தாக்கம் மற்றும் இரவில் நிலவிய கடுங்குளிரின் தாக்கம் குறைந்து வருகிறது. அதே நேரம், தேயிலை செடிகளை சிவப்பு நிற சிலந்திகள் தாக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.குன்னூர் உபாசி அறிவியல் நிலைய முதன்மை ஆலோசகர் டாக்டர்.ராதாகிருஷ்ணன் கூறியதாவது:

குன்னூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சில நாட்களாக, பகல் நேரத்தில் அதிகபட்சம் 24 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்சம் 20 டிகிரி செல்சியஸ் வெப்பம் காணப்பட்டது. இரவில் 8 - 11 டிகிரி செல்சியசாகவும், ஊட்டியில் 5 - 6 டிகிரி செல்சியசாகவும் பதிவாகியுள்ளது. மதிய நேரத்தில், காற்றின் ஈரப்பதம் 40 சதவீதம் குறைந்து காணப்படுவதால், தேயிலை செடிகள் வறண்டு போகக் கூடிய வாய்ப்புள்ளது. காலநிலை மாற்றத்தால் வரும் நாட்களில் உறைபனியின் தாக்குதல் குறையும். தேயிலை செடிகளை சிவப்பு நிற சிலந்தி பூச்சிகள் தாக்கக் கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளது.விவசாயிகள், தங்கள் தேயிலை தோட்டங்களில் இலை பறிக்கும் போது தாய் இலை விட்டு கொழுந்து எடுக்க வேண்டும். தேயிலை செடிகளை வறட்சியில் இருந்து பாதுகாக்க யூரியா, எம்.ஓ.பி., ஆகியவற்றை ஒரு சதவீத கரைசலுடன் கலந்து தெளிக்க வேண்டும். இளம் தேயிலை செடிகளுக்கு நிழல் தரும் கூடாரங்களை ஏற்படுத்துவதுடன், சொட்டு, தூவு நீர் முறைபடி நீர் பாய்ச்சி தேயிலை செடிகளை பாதுகாக்க வேண்டும்.இவ்வாறு, உபாசி அறிவியல் நிலைய முதன்மை ஆலோசகர் ராதாகிருஷ்ணன் கூறினார்.பசுந்தேயிலைக்கு ஓரளவு விலை கிடைத்து வரும் நிலையில், தேயிலை தேடிகளில் சிலந் தியின் தாக்குதல் பரவாமல் தடுக்க, உபாசி யின் அறிவுரையை விவசாயிகள் பின்பற்றி னால், விலையை தக்க வைக்க முடியும்.

### விவசாயிகளுக்கு தோட்டக்கலை சுற்றுலா 26ம்தேதிக்குள் பெயர் பதிவு செய்ய அழைப்பு

தஞ்சாவூர்: தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் நடத்தப் படும் சுற்றுலாவில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள் வரும் 26ம் தேதிக் குள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் வெளி மற்றும் உள் மாநில தொழில் நுட்ப பயிற்சி, சுற்றுலா 7 நாட்கள் நடக்கிறது.

வெளிமாநிலத்திற்கு 299 விவசாயிகளும், உள் மாநிலத்திற்கு ஆயிரம் விவசாயிகளும் தேர்வு செய்யப்பட உள்ளனர். எனவே தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும், செய்ய இருக்கும் விவசாயிகள் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகி தெரிந்து கொள்ளலாம். தஞ்சை, திருவையாறு தாலுகாவை சேர்ந்தவர்கள் தோட்டக் கலை

உதவி இயக்குனர் அலுவலகத்திலும், பூதலூர், ஒரத்தநாடு தாலுகாவைச் சேர்ந்தவர்கள் பூதலூர் தோட்டக் கலை உதவி இயக்குனர் அலுவலகத்திலும் பெயர் பதிவு செய்யலாம்.குடந்தை திருவிடைமருதூர் தாலுகாவைச் சேர்ந்தவர்கள் சாக்கோட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்திலும், பாபநாசம், அம்மாபேட்டை, திருப்பனந்தாள் பகுதியைச் சேர்ந்தவர்கள் பாபநாசம் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்திலும் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். பட்டுக்கோட்டை, மதுக்கூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் பட்டுக்கோட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்திலும், பேராவூரணி, சேதுபாவாசத்திரம், திருவோணம் பகுதியைச் சேர்ந்தவர்கள் பேராவூரணி உதவி இயக்குனர் அலுவலகத்திலும் தங்களது பெயரை 26ம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு அலுவலக குறிப்பில் கூறப்பட்டுஉள்ளது.

### வேளாண்மை பயிற்சி திட்டம்

பாபநாசம்:பாபநாசம் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகள் பயறுவிதை சேர்க்கும் கிராம பயிற்சித் திட்டம் நடந்தது. தஞ்சை இணை இயக்குனர் முருகன் தலைமை வகித்து பயிற்சி வகுப்பை தொடங்கி வைத்தார். வேளாண் அலுவலர் ஆனந்தப்பிரியா வரவேற்றார்.தொழில்நுட்ப துணை இயக்குனர் சேகர், துணை இயக்குனர் ரகுநாதன், துணை இயக்குனர் கலியபெருமாள் (நேர்முகம்), விதை உதவி அலுவலர்கள் விஜயகுமார், எபினேசர், வேளாண் உதவி இயக்குனர் ஜெயக்குமார் உட்பட பலர் கருத்துரை வழங்கினர். பயிற்சியில் 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். துணை அலுவலர் பழனிவேல் நன்றி கூறினார்.

### தோட்டக்கலை திட்ட செயல்பாடுகள் வேளாண்துறை இணை செயலாளர் ஆய்வு

தூத்துக்குடி: தமிழக அரசின் வேளாண்மைத்துறை இணைச்செயலாளர் வாசுகி புதூர் வட்டாரத்தில் தோட்டக்கலை திட்ட செயல்பாடு குறித்து கள ஆய்வு செய்தார்.ஆய்வின் போது இவ்வட்டாரத்தில் செயல்படுத்தியுள்ள தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தியுள்ள துல்லியப் பண்ணைத்திட்டம் குறித்து ஆய்வு செய்தார்.துல்லியப் பண்ணைத்திட்டத்தின் கீழ் வெம்பூர், கோடாங்கிபட்டி கிராமத்தில் (வி.கோடாங்கிபட்டி) கிராமத்தில் சந்திரசேகர் என்றவிவசாயியின் தோட்டத்தில் சீரிய ஒட்டு மிளகாய் பயிர் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து பயிரிட்டதை நேரில் பார்வையிட்டு, இத்திட்டத்தின் செயல்பாடுகளும், அதன் பயன்களையும், விவசாயிடம் நேரில் கேட்டறிந்தார். ஆய்வின் போது மிளகாய்ப்பயிரில் மகசூலை அதிகரிக்கவும், நீர் சிக்கனத்தைக் கடைபிடிக்கவும். சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பது இப்பகுதிக்கு அவசியம் எனவும், துல்லியப் பண்ணைத்திட்டம், இதற்கு ஒரு தூண்டு கோலாக செயல்படுகிறது எனவும் தெரிவித்தார். துல்லியப் பண்ணைத்திட்டத்தின் கீழ் இறவைக் காய்கறிப்பயிர் செய்யப்படும் விவசாயிகளுக்கு 65 சதவீதம் மானியத்தில் சொட்டு நீர்பாசனம், உபகரணங்கள் வழங்குவதையும், மேலும், துல்லியப் பண்ணைத்திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யும் முதல் பயிருக்கு துல்லியப்பண்ணைத்திட்ட மானியம் மற்றும் இடுபொருட்கள் மானியமாக தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது என்பது பற்றியும் கூறினார்.ஆய்வின் போது நீரில் கரையும் உரங்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் பயிர்களுக்கு அளிக்கும் முறையை நேரில் விவசாயிடம் எவ்வாறு இந்த தொழில்நுட்பம் பயன்படுகிறது எனக் கேட்டறிந்தார்.

### தோட்டக்கலை திட்ட செயல்பாடுகள் வேளாண்துறை இணை செயலாளர் ஆய்வு

தூத்துக்குடி: தமிழக அரசின் வேளாண்மைத்துறை இணைச்செயலாளர் வாசுகி புதூர் வட்டாரத்தில் தோட்டக்கலை திட்ட செயல்பாடு குறித்து கள ஆய்வு செய்தார்.ஆய்வின் போது இவ்வட்டாரத்தில் செயல்படுத்தியுள்ள தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தியுள்ள துல்லியப் பண்ணைத்திட்டம் குறித்து ஆய்வு செய்தார்.துல்லியப் பண்ணைத்திட்டத்தின் கீழ் வெம்பூர், கோடாங்கிபட்டி கிராமத்தில் (வி.கோடாங்கிபட்டி) கிராமத்தில் சந்திரசேகர் என்றவிவசாயியின் தோட்டத்தில் சீரிய ஒட்டு மிளகாய் பயிர் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து பயிரிட்டதை நேரில் பார்வையிட்டு, இத்திட்டத்தின் செயல்பாடுகளும், அதன் பயன்களையும், விவசாயிடம் நேரில் கேட்டறிந்தார். ஆய்வின் போது மிளகாய்ப்பயிரில் மகசூலை அதிகரிக்கவும், நீர் சிக்கனத்தைக்

கடைபிடிக்கவும். சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பது இப்பகுதிக்கு அவசியம் எனவும், துல்லியப் பண்ணைத்திட்டம், இதற்கு ஒரு தூண்டு கோலாக செயல்படுகிறது எனவும் தெரிவித்தார். துல்லியப் பண்ணைத்திட்டத்தின் கீழ் இறவைக் காய்கறிப்பயிர் செய்யப்படும் விவசாயிகளுக்கு 65 சதவீதம் மானியத்தில் சொட்டு நீர்பாசனம், உபகரணங்கள் வழங்குவதையும், மேலும், துல்லியப் பண்ணைத்திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யும் முதல் பயிருக்கு துல்லியப்பண்ணைத்திட்ட மானியம் மற்றும் இடுபொருட்கள் மானியமாக தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது என்பது பற்றியும் கூறினார்.ஆய்வின் போது நீரில் கரையும் உரங்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் பயிர்களுக்கு அளிக்கும் முறையை நேரில் விவசாயிடம் எவ்வாறு இந்த தொழில்நுட்பம் பயன்படுகிறது எனக் கேட்டறிந்தார்.

### விவசாயிகளுக்கு நுகர்வோர் சட்டம் குறித்த பயிற்சி

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டியில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் விவசாயிகள் மற்றும் விவசாயம் தொடர்புடையவர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் முகம்மது பாதுர்ஷா தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அன்பழகன் துவக்கி வைத்தார். திருத்துறைப்பூண்டி வேளாண் அலுவலர் தவமணி வரவேற்றார். மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புத்துறை பயிற்றுனர் ஜெயராமன், வேளாண் அலுவலர்கள் உத்திராபதி, கணேசன் ஒகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினர். திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர் யூனியன்களில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 50 விவசாயிகள் பயிற்சி பெற்றனர். ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்க தலைவர் வெங்கடாசலம், ஆதிரெங்கம் பஞ்சாயத்து தலைவர் முருகதாஸ், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் நமச்சிவாயம், நுகர்வோர் பாதுகாப்புக்குழு தலைவர் ராமையா, செயலாளர் அப்துல்காதர், பாலம் அமைப்பு செந்தில்குமார், உழவர் விவாதக்குழு அமைப்பாளர் ஜானகிராமன் உட்பட பலர் பங்கேற்றனர்.மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் வழங்கல் அலுவலர் முகம்மது பாதுர்ஷா, ""நுகர்வோர் விழிப்புணர்வுக்காக பல பணிகளை தமிழக அரசு செய்து வருகிறது.

விவசாயிகளுக்கும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் குறித்து பயிற்சி மாநில அளவில் நடத்தப்படுகிறது. திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சியில் முழுமையாக பங்கேற்று விவசாயிகள் பயன்பெற வேண்டும்,'' என்றார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அன்பழகன் முகாமை துவக்கி வைத்து, ""நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் மற்றும் விழிப்புணர்வு சிலருக்கு இருந்தாலும், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகும். நாட்டில் உணவு உற்பத்தியை உருவாக்குவோர் விதை முதல் இடுபொருள் வரை பெரும்பான்மையாக தனியார் நிறுவனங்களில் வாங்கி பயன்படுத்துகின்றனர். இதில், விவசாயிகள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

அவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் பயனுள்ளதாக இருக்கும். இதை விவசாயிகள் அறிந்து உரிமை, கடமையை அறிய வேண்டும்,'' என்றார்.மாவட்ட பாதுகாப்புத்துறை ஜெயராமன், ""வேளாண் சார் பணியாளர்கள், விவசாயிகளும் நுகர்வோர்தான். நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் நுகர்வோர் உரிமைகள், கடமைகள், நுகர்வோர் பாதிப்புக்கு உள்ளாகும்போது எவ்வாறு நிவாரணம் பெறுவது, நுகர்வோர் நீதிமன்றத்தில் எவ்வாறு வழக்குப்பதிவு செய்வது என்பது, விவசாயிகளுக்கு சாதகமாக நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் வழங்கிய தீர்ப்புகள் குறித்தும்,'' பேசினார். திருத்துறைப்பூண்டி டி.எஸ்.ஓ., தேன்மொழி நன்றி கூறினார்.

### பயிர் காப்பீட்டு விளக்க கூட்டம்

விழுப்புரம்:கால நிலை தொடர்புடைய பயிர் காப்பீட்டு திட்டம் குறித்த விளக்க கூட்டம் காணை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடந்தது.வேளாண்மை உதவி இயக்குனர் தாமோதரன் தலைமை தாங்கினார். கால நிலை பயிர் பாதுகாப்பு திட்டம் குறித்து ஐ.சி.ஐ.சி.ஐ.,லம்பார்ட் நிறுவன கால நிலை பயிர் காப்பீட்டு திட்ட அதிகாரி லட்சுமி விளக்கினார். காணை வேளாண்மை அலுவலர் ஆனந்தி, அன்னியூர் துணை வேளாண்மை அலுவலர் பலராமன்

சிறப்புரையாற்றினர்.ராபி பருவத்தில் அனைத்து விதமான பயிர் சாகுபடி செய்துள்ள நெல், உளுந்து, சூரியகாந்தி, மக்காச் சோளம் பயிர்களுக்கு பயிர் காப் பீடு செய்து கொள்ளலாம் என விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினர்.

**முன்னோடி விவசாயிகள் வேளாண்மை சுற்றுலா**

செஞ்சி:வல்லம் வட்டார முன் னோடி விவசாயிகளை வேளாண்மைத்துறையினர் சுற்றுலா அழைத்து சென்றனர்.வல்லம் வட்டாரத்தை சேர்ந்த 33 முன்னோடி விவசாயிகளை வேளாண் மைத்துறை மூலம் தொழில் நுட்பங்களை கண்டறிவதற்காக சுற்றுலா அழைத்து சென்றனர். வல்லம் வேளாண்மை உதவி இயக்குநர் துரைசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார்.வேளாண்மை அலுவலர் சரவணன் விவசாயிகளை அழைத்து சென் றார். திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுடன் வேளாண் வல்லுநர்கள் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து கலந் துரையாடல் நடத்தினர். உளுந்து, மணிலாவில் தெளிப்பு நீர் பாசனம் செய்வது குறித்து செயல் விளக்கம் அளிக்கப் பட் டது. மணிலா நேரடி விதைப்பு கருவி, காய் பிரிக்கும் கருவி, களை எடுக்கும் கருவி, ரோட் டோவேட்டர் போன்றவற்றின் செயல்பாட்டை விவசாயிகள் பார்வையிட்டனர்.வானூர் வட்டாரத்தில் கரும், தர்பூசணியில் துல் லிய பண்ணையம், துவரை பயிரில் சொட்டு நீர் பாசனம், கலப்பு பண்ணைய வயல்கள், மண் புழு உரம் தயாரித்தல், பசுமைக் குடிலில் நாற்றங்கால் தயாரித்தல் முறைகளை கண்டுணர்ந்தனர்.வானூர் வேளாண்மை உதவி இயக்குநர் கென் னடி ஜெபக்குமார், துணை வேளாண்மை அலுவலர் மகேந்திரபூபதி உதவி வேளாண்மை அலுவலர் மணிவண்ணன் உடனிருந்தனர்.சுற்றுலா ஏற்பாடுகளை வல்லம் வட்டார உதவி வேளாண்மை அலுவலர் மனுவேல், மாணிக்கம், தங்கராசு, கோபாலகிருஷ் ணன் செய்திருந்தனர்.

**பருப்புகள் விலை இன்னும் குறையும் வெளிநாட்டு இறக்குமதி எதிரொலி**

திருப்பூர்:"வெளிமாநிலங்களில் இருந்து வரத்து அதிகரித்திருப்பதால், பருப்பு வகைகளின் விலை இறங்குமுகமாகி உள்ளது; பொதுத் துறை நிறுவனங்கள் இறக்குமதி செய்துள்ள பருப்பு வகைகளும் விற்பனைக்கு வந்தால், மேலும் விலை குறையும்' என்று வியாபாரிகள் நம்பிக்கை தெரிவித் துள்ளனர்.தமிழகத்தில் கடந்த சில மாதங் களாக, அத்தியாவசிய பொருட் களின் விலை கடுமையாக உயர்ந் துள்ளது. சர்க்கரை விலை கிலோ 42 ரூபாயாகவும், அரிசி 40 ரூபாயாகவும், சமையல் எண்ணெய் 55 ரூபாயாகவும், துவரம் பருப்பு 80 ரூபாயாகவும் உயர்ந்ததால், நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டனர்.வெளிமார்க்கெட்டில் பொருட் களின் விலை பல மடங்கு உயர்ந்ததால், மத்திய, மாநில அரசுகள் மீது பொதுமக்கள் அதிருப்தி அடைந் தனர். பொதுமக்களுக்கு ஆதர வாக, எதிர்கட்சிகள் குரல் கொடுத்தன.

நெருக்கடியை சமாளிக்க, பிரதமர் தலைமையில் அனைத்து மாநில முதல்வர்கள் பங்கேற்ற ஆலோசனை மாநாடு நடத்தப் பட்டது.இந்நிலையில், அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வு, சில நாட்களாக கட்டுக்குள் வந் துள்ளது. பருப்பு வகைகளின் விலை இறங்குமுகமாகியுள்ளது. 80 ரூபாய் வரை விற்கப்பட்ட துவரம் பருப்பு, 62 ரூபாயாக குறைந்துள்ளது. உளுந்தம் பருப்பு 72 ரூபாயாக குறைந்துள்ளது. இந்த பருப்பு வகைகள் மூட்டைக்கு குறைந்த பட்சம் ஆயிரம் ரூபாய் வரை குறைந்துள்ளன. பாசிப் பருப்பு விலையில் பெரிதாக மாற்றம் எதுவும் இல்லை.சர்க்கரை மற்றும் எண்ணெய் வகைகளின் விலையும் குறைந்து வருகிறது. சர்க்கரை மூட்டை ஒன்றுக்கு 200 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. பாமாயில், சூரியகாந்தி எண்ணெய், கடலை எண் ணெய், தேங்காய் எண்ணெய் களின் விலையும் குறைந்துள்ளது.இதுபற்றி வியாபாரிகள் கூறுகையில், "இந்தியாவில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள் பருப்பு வகைகளை இறக்குமதி செய்யத் துவங்கியுள்ளன. தான் சானியா, மியான்மர்,

கனடா, ஆஸ்திரேலியா, மொசாம்பிக் போன்ற நாடுகளில் இருந்து பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.தமிழகத்திற்கு, வெளிமாநில பருப்பு வரத்து இருக்கும் நிலையில், இறக்குமதி செய்யப்படும் பருப்பு வகைகளும் அடுத்த மாதம் வெளிமார்க்கெட்டில் விற் பனைக்கு வரும் நிலை உள்ளது. ஏற்கனவே, குறைந்திருந்த பருப்பு வகை உற்பத்தி, நடப்பு பருவத்தில் சிறிது அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு பல வகையிலும் மார்க்கெட்டுக்கு பருப்பு வரத்து இருக்கும் என்பதால், விலை குறைந்து வருகிறது,' என்றனர்.

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

***தி.மு.க. ஆட்சியில் எந்த ஆண்டும் கரும்புக்கான விலை குறைக்கப்படவில்லை கருணாநிதி அறிக்கை***

*சென்னை, பிப்.15–*

*தி.மு.க. ஆட்சியில் கரும்புக்கு விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறோமே தவிர, ஒரு ஆண்டும் கரும்புக்கான விலையை குறைத்ததில்லை என்று முதல்–அமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக முதல்–அமைச்சர் கருணாநிதி நேற்று வெளியிட்ட அறிக்கை விவரம் வருமாறு:–*

*செல்வாக்கை சரிசெய்ய...*

*சரிந்து வரும் தனது செல்வாக்கை மீண்டும் சரி செய்து எப்படியாவது மீண்டும் முதல்–அமைச்சராகி விட வேண்டும் என்று கனவு காணுகின்ற ஜெயலலிதா, அந்தக் கனவை நனவாக்குவதற்காக ஏதோ ஒரு பிரச்சினையைப் பூதாகாரப்படுத்திக் கொண்டு, மிச்சம் இருக்கிற தன்னுடைய சேனாதிபதிகளை விட்டு ஆங்காங்குள்ள கட்சிக்காரர்களை ஆர்ப்பாட்டம் என்ற பெயரால் கூட்டச் செய்து, அந்தக் கூட்டத்தில் தமது ஆட்சிக் கால வீர தீர பிரதாபங்களைச் சொல்வதோடு, தி.மு.க.ஆட்சியில் பொது மக்களுக்கும், ஏழை, எளியோருக்கும், விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், அரசு அலுவலாளர்களுக்கும், பொதுவாக அடித்தட்டு மக்களுக்கும் செய்துள்ள அரும்பெரும் சாதனைகளையெல்லாம் மறைத்துவிட்டு, பொய்யும் புளுகுமாக தனது விஷமப் பிரச்சாரத்தை ஒரு சில பத்திரிகைகளின் உதவியோடு நடத்தி வருகிறார்.*

*அதில் ஒன்று தான் அண்மையில் அவர் விழுப்புரத்தில் கரும்பு விவசாயிகளுக்காக வடித்த கண்ணீராகும். அந்தப் புலம்பல் பாட்டில் பல்லவியாக 2005–2006–ம் ஆண்டுக்கான அரவைப் பருவத்திற்கு ஜெயலலிதா, கரும்புக்கு குறைந்தபட்ச விலையாக மத்திய அரசு அறிவித்த 795 ரூபாயுடன் தனது அரசின் ஆதார விலையாக 219 ரூபாயும் சேர்த்து, கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,014 ரூபாய் வழங்க உத்தரவிட்டதாக விழுப்புரத்தில் ஒரு பொய்யை உதிர்த்திருக்கிறார்.*

*பதில் சொல்ல கடமைப்பட்டவர்*

*உண்மை என்னவென்றால், 2005–ம் ஆண்டுக்கு முன்பு 2001–ம் ஆண்டு முதல் அவர் தான் தமிழகத்தில் முதல்–அமைச்சராக இருந்தார். அப்போது எந்த ஆண்டிலாவது மத்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச விலையை விட ஒரு பைசாவாவது கூடுதலாக கரும்புக்கு அவர் ஆட்சியிலே வழங்கப்பட்டது உண்டா என்பதற்கு அவர் பதில் சொல்லக் கடமைப்பட்டவர். "இல்லை – இல்லை – இல்லை" என்பதுதான் கரும்பு விவசாயிகளின் பதிலாகும்.*

*ஐந்தாண்டு கால ஆட்சியில், நான்காண்டுகளில் ஒரு பைசா கூட உயர்த்த ஜெயலலிதா மறுத்துவிட்டு, கடைசி ஆண்டான 2005–ல் மட்டும், அதுவும் அது தேர்தல் ஆண்டு என்பதால், கரும்பு விவசாயிகளை ஏமாற்றுவதற்காக விலையை உயர்த்துவதாக அறிவித்தார். அப்படி அறிவித்தாரே தவிர, அவர் ஆட்சியிலிருந்து இறங்கும் வரையில் அந்த விலையை விவசாயிகளுக்குக் கொடுக்கவில்லை.*

*வாகன வாடகை*

*தி.மு.க. 2006–ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு தான் அந்தத் தொகை கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது*

*என்பதை ஜெயலலிதாவினால் மறுக்க முடியுமா? அதுமட்டுமல்ல; ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 2003–04–ம் ஆண்டில் மத்திய அரசு நிர்ணயித்த கரும்புக்கான குறைந்தபட்ச விலையைக் கூட 3 மாதம் வரையில் தாமதித்து, அதன்பிறகு தான் ஜெயலலிதா அரசு வழங்கியது.*

*விழுப்புரத்தில் அடுத்து ஒரு பொய்யை அவரது பேச்சில் அடுக்கிக்காட்டியிருக்கிறார். கரும்பு விவசாயிகளுக்கான வாகன வாடகையை அந்தந்த ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவருடைய ஆட்சிக் காலத்திலே தான் முதன்முதலாக உத்தரவு பிறப்பித்தோம் என்றும் ஒரு பொய் மூட்டையை அவிழ்த்துக் கொட்டியிருக்கிறார். உண்மை என்ன? தி.மு.க. ஆட்சியில் தான் முதன் முதலாக கரும்பு விவசாயிகளுக்கான வாகன வாடகை எத்தனை கிலோ மீட்டர் தூரம் என்ற பாகுபாட்டையெல்லாம் பார்க்காமல் அனைத்துக் கரும்பு விவசாயிகளுக்கும் 2006–2007–ம் ஆண்டிலேதான் சராசரி டன் ஒன்றுக்கு 90 ரூபாய் வீதம் வழங்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.*

*தவறான புள்ளி விவரம்*

*இந்த உத்தரவு முதலில் கூட்டுறவு ஆலைகளுக்கும், பொதுத்துறை ஆலைகளுக்கும் என்றிருந்தது. இந்த ஆண்டு 2009–2010–ல் தனியார் ஆலைகளும் இந்த வாகன வாடகையை கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு அதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.*

*இமாலய புளுகு ஒன்றையும் இந்த அம்மையார் ஜோடித்து, அதாவது மத்திய அரசு கரும்பிற்கான குறைந்தபட்ச விலையை கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.503.40 என்ற அளவுக்கு உயர்த்தியிருந்தது என்றும், ஆனால் தி.மு.க. அரசோ 80 ரூபாய் அளவுக்கு மாநில அரசின் ஆதார விலையை குறைத்து விட்டது என்றும் கூறியிருக்கிறார். பாவம்! யாரோ ஒரு அண்டப் புளுகர் அவருக்கு எழுதிக் கொடுத்த தவறான புள்ளி விவரத்தை, இந்த ஆகாயப் புளுகர் விழுப்புரத்தில் பரப்புரையாற்றியிருக்கிறார்.*

*விலையை குறைக்கவில்லை*

*2005–2006–ம் ஆண்டு மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை ரூ.795. 2009–2010–ம் ஆண்டு மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை ரூ.1,298.40. அதாவது 503.40 ரூபாய் மத்திய அரசு உயர்த்தியுள்ளது என்பது உண்மை. ஆனால் தமிழக அரசு மத்திய அரசு நிர்ணயம் செய்ததை விட 2005–2006–ம் ஆண்டில் 219 ரூபாயும், 2006–2007–ம் ஆண்டில் 222.50 ரூபாயும், 2007–2008–ம் ஆண்டில் 222.20 ரூபாயும், 2008–2009–ம் ஆண்டில் 238.20 ரூபாயும், 2009–2010–ம் ஆண்டில் 359.80 ரூபாயும் கூடுதலாகத்தான் விலை நிர்ணயம் செய்திருக்கிறதே தவிர, எந்த ஆண்டிலும் 80 ரூபாய் குறைத்து விலையை நிர்ணயம் செய்யவில்லை.*

*அதாவது, 2005–2006–ல் மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை ரூ. 795 என்பது தற்போது தமிழக அரசினால் 642.40 கூடுதலாக சேர்த்து, இந்த ஆண்டு கரும்பு டன் ஒன்றுக்கு 1,437.40 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுதவிர தமிழகத்திலே மேலும் கூடுதலாக கரும்பு டன் ஒன்றுக்கு ரூபாய் 90 வாகன வாடகையாகவும் தரப்படுகிறது. எனவே, மத்திய அரசை விட ஆதார விலையை மாநில அரசு 80 ரூபாய் குறைத்துவிட்டது என்று விழுப்புரத்தில் ஜெயலலிதா பேசியிருப்பதைப் பார்க்கும்போது அம்மையாருக்கு “அகில உலக புளுகு ராணி” என்று பட்டமும் கொடுக்கலாம் அல்லவா?*

*மக்களை ஏமாற்ற பார்க்கிறார்*

*ஜெயலலிதா ஆட்சியில் 2005–2006–ம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி அளவு 21.38 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது என்றும், 2008–2009–ம் ஆண்டு சர்க்கரை உற்பத்தியின் அளவு 16.16 லட்சம் மெட்ரிக் டன்னாக குறைந்தது என்றும் ஜெயலலிதா விழுப்புரத்தில் பேசியிருக்கிறார். ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் சர்க்கரை உற்பத்தி 2003–04 ஆண்டில் 9.20 லட்சம் மெட்ரிக் டன்களாகவும், 2004–05 ஆண்டில் 11.09 லட்சம் மெட்ரிக் டன்களாகவும் குறைந்த அளவிலேயே இருந்தது.*

*இதை அப்படியே மறைத்துவிட்டு, 2005–2006–ம் ஆண்டு எவ்வளவு உற்பத்தி என்பதை மட்டும் கூறி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார். அதைப்போலவே, தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் 2006–07ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 25.39 லட்சம் மெட்ரிக் டன்களாகவும், 2007–08–ம் ஆண்டில் அது 21.41 லட்சம் மெட்ரிக் டன்களாகவும் சர்க்கரை உற்பத்தி உயர்ந்துள்ளது. 2006–2007–ம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி 25.39 லட்சம் மெட்ரிக் டன் என்பது, கடந்த பத்தாண்டு காலத்தில் உற்பத்தியாகாத அளவிற்கு அதிக அளவிற்கான சர்க்கரை உற்பத்தியாகும்.*

*உண்மையை மறைத்து...*

*இந்த உண்மையையெல்லாம் மறைத்துவிட்டு, 2008–09–ல் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக மகசூல் பெரிதும்*

*பாதிக்கப்பட்டதை கணக்கிலே எடுத்துக் கொண்டு ஜெயலலிதா பேசியிருக்கிறார். எனவே, இப்போது எனக்கு மட்டுமல்ல; கரும்பு விளைவிக்கும் எனதருமை விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவருடைய உள்ளத்திலும் எழுகின்ற கேள்வி, இப்போது விழுப்புரத்திற்கு வந்து பேசியிருப்பது முன்னாள் முதல்வரா? அல்லது எந்நாளும் விவரமின்றி உளறுகின்ற விதூஷக மகாராணியா என்பது தான்?*
*இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.*

***கச்சா எண்ணெய் விலை 74.13 டாலராக வீழ்ச்சி***

*அமெரிக்கா, கச்சா எண்ணெய் பயன்பாட்டில், சர்வதேச அளவில் முதலிடத்தில் உள்ளது. அங்கு, கச்சா எண்ணெய் கையிருப்பு அதிகரித்துள்ளது. இதனையடுத்து, சென்ற வெள்ளிக்கிழமை அன்று, நியூயார்க் முன்பேர வர்த்தக சந்தையில், மார்ச் மாத டெலிவரிக்கான ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 1.15 டாலர் குறைந்து 74.13 டாலராக குறைந்துள்ளது. லண்டன் முன்பேர வர்த்தக சந்தையிலும் இது 1.22 டாலர் குறைந்து 72.90 டாலராக சரிவடைந்தது.*
*பல ஐரோப்பிய நாடுகளில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, யூரோ உள்ளிட்ட இதர நாட்டு செலாவணிகளுக்கு எதிராக அமெரிக்க டாலரின் மதிப்பு உயர்ந்துள்ளது. கச்சா எண்ணெயை வாங்கும் நிறுவனங்கள் அதற்கான தொகையை டாலரில் செலுத்த வேண்டும். எனவே, டாலர் மதிப்பு அதிகரிப்பதால், கச்சா எண்ணெய் மதிப்பு உயர்ந்து, அதற்கான தேவைப்பாடு குறைந்துவிடும்.*
*சீனா, கச்சா எண்ணெய் பயன்பாட்டில், உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அந்நாட்டில் பணப்புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோன்ற காரணங்களால், சென்ற வெள்ளிக்கிழமை அன்று, சர்வதேச சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை குறைந்தது.*